# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 34 November- 2021 Issue - 11


ஆசிரியர் உரை

## பக்தியாய் இருப்பது மட்டும் போதுமானதா?

இவ்வளவு காலம் கழித்து இப்படி ஒரு கேள்வி கேட்டால் எப்படி? ஆன்மீக வாழ்வில் பக்தியாய் இருப்பதைவிட வேறு என்ன வேண்டும் என்ன நீங்கள் கேட்காமல் கேட்பது புரிகிறது. ஆனால், தலைப்பை நன்றாக கவனியுங்கள். கேள்வியில் உள்ள ***மட்டும்*** என்னும் வார்த்தையை உங்கள் கண்களை அகல விரித்துப் பாருங்கள். அப்பொழுது கேள்வியின் உள்ளார்ந்த. பொருளை உங்களால் உணர்ந்து கொள்ளமுடியும். ஆம், சர்வ வல்ல தேவனிடத்தில் பக்தியாய் , பயபக்தியாய் ஒருவன் இருப்பதை நான் இங்கே கேள்விக்கு உட்படுத்தவில்லை. மாறாக , அதுமட்டும் போதுமா என்பது தான் என் ஆதங்கம். கண்டிப்பாக பக்தி மட்டும் போதவே போதாது எனபதை வேதத்தின் வெளிச்சத்தில் நாம் பார்க்க உள்ளோம்.

இதற்காகப் பரிசுத்த எழுத்துக்களில் வெளிப்படுத்தப்பட்டு, பரவலாக அறியப்பட்ட ஒரு மனிதனை நாம் கவனிக்க உள்ளோம். அவன் வேறு யாருமல்ல **புறா** என்னும் பொருளைத் தன் பெயருக்கு கொண்டிருக்கும் அமித்தாயின் குமாரனான யோனா தான். பழைய ஏற்பாட்டிலுள்ள 12 சிறிய தீர்க்கதரிசிகளில் இவன் ஒருவன். செபுலோன் கோத்திரத்தைச் சேர்ந்த இவன், கலிலேயாவிலிருந்து காத்தேப்பர் ஊரைச் சொந்தமாகக் கொண்டவன். வடக்கு இராஜ்ஜியத்தின் அரசர்களில் ஒருவனாகிய யெரொபெயாமின் நாட்களில் தீர்க்கதரிசியாய் பணி செய்தவன். பொதுவாக, ஒரு தீர்க்கதரிசி என்பவன் தேவனுடைய வாயாக இருந்து, தேவன் வெளிப்படுத்தும் செய்தியை தேவன் சார்பாக மக்களிடம் கொண்டு செல்வான். இதைத்தான் எல்லாத் தீர்க்கதரிசிகளும் செய்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த யோனா மற்ற தீர்க்கதரிசிகளிடமிருந்து மாறுபட்டு நிற்கிறான். ஆம், பழைய ஏற்பாட்டின் நாட்களில், அந்நிய மண்ணுக்குச் சென்று, அந்நிய மக்களுக்காகவே தீர்க்க தரிசனம் உரைத்த ஒரே தீர்க்கன் இவன்தான். அது மாத்திரமல்ல, தேவச் செய்தியைக் கேட்டு மக்கள் மனந்திரும்பியதைப் பார்த்து, துக்கப்பட்ட தீர்க்கனும் இவன் தான் ( யோனா 4:1). அட இன்னொன்றும் உண்டு, நினிவேக்கு இரக்கம் காட்டின கர்த்தரின் செயலை ஏற்றுக் கொள்ள மனமில்லாமல், **கர்த்தரிடம் கடுங்கோபங் கொண்டு**, இன்னும் சொல்லப்போனால், கர்த்தரையே கடிந்துக் கொள்ளத் துணிந்த ஒரே தீர்க்கனும் இவன்தான் (யோனா 4:2,3) இவைகளை வைத்துப் பார்க்கும் போது, யேனா ஒரு விசித்திரமான தீர்க்கதரிசி. அப்படித்தானே! ஆனாலும், அவன் ஒரு தீர்க்கதரிசியே, ஆம், தேவ வழிநடத்துதலுக்கும், தேவச்செய்தியைப் வெளிப் படுத்துவதற்கும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட ஒருவன்.

இந்தத் தீர்க்கதரிசியைத்தான் கர்த்தர், மகா நகரமாகிய நினிவேக்கு எதிராகப் பிரசங்கி என்று பணித்தார். அக்காலத்தில் இந்த நினிவே ஒரு மிகப்பெரிய தலை நகரப் பட்டணம். மத்திய தரைக் கடலிலிருந்து சுமார் 450 மைல் தொலைவில் டைகிரிஸ் நதியின் கிழக்குக் கரையில் அமைந்திருந்த பட்டணம். இப்பட்டணத்தில் விக்கிரக வழிபாடு கொடுங்கோல் ஆட்சி, ஒழுக்கச் சீரழிவு என்று எல்லாமே உச்சத்தில் இருந்தது. இதற்குக் காரணம் அவர்களுக்கு அறிவும், ஆற்றலும் செல்வமும் ஒரு சேர இருந்ததே. இது போதாதா கெட்டுக் குட்டிச் சுவராவதற்கு! பெரு வெள்ள காலத்திற்கு முன்னான நோவாவின் நாட்களில் நடந்த அக்கிரமம் போன்று இங்கும் நடந்தது. அவர்களின் அக்கிரமம் தேவச் சமூகத்தை எட்டியது. பெரும்பாலான சமயங்களில் தேவன் தப்புக்கான தண்டனையைச் சுடசுடத் தருவதில்லை. நாதாப், அபியூ, ஊசா போன்ற விதிவிலக்குகள் உண்டு. (லேவி 10-ம் அதிகாரம், II சாமு. 6:7 ஆயினும், தண்டிப்பதற்கு முன் மனந்திரும்ப வாய்ப்பு கொடுக்கிறார். நம் தேவனின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

நினிவேயின் அக்கிரமம் விண்ணை முட்டியிருந்தாலும், அவர்கள் காரியத்தில் தேவன் கண்களை இறுக்கி மூடாமல், இரக்கப் பார்வையை அவர்கள்மீது செலுத்தினார். ஆம், **நீ எழுந்து** மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி அவர்கள் அக்கிரமம் என் சமூகத்தை வந்து எட்டினது என்றார் ( யோனா 1:2). **நீ எழுந்து** என்ற சொற்றொடரில் ஓர் அவசரம் கர்த்தருக்கு இருப்பது தெரிகிறது. ஆனால், கர்த்தரின் தீர்க்கதரிசிக்கு அது தெரியவில்லை. கர்த்தர் பாவத்தைப் பார்க்கிற பார்வைக்கும்,

மனிதன் பாவத்தைப் பார்க்கும் பார்வைக்குமான வேறுபாட்டை நாம் இங்கே கவனிக்க வேண்டும். ஆம், பாவம் சம்பந்தமாக நம் ஒவ்வொருக்கும் தேவப்பார்வை வேண்டும்.

இப்பஜ தேவக்கட்டளையைப் பெற்றுக்கொண்ட **தீர்க்க தரிசியாகிய** யோனா, **அதுமாத்திரமல்ல,** தன்னை கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன் [வசனம்1:9] என்று பீற்றிக் கொண்ட யோனா, தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையை மீறி கர்த்தருடைய சமூகத்திலிருந்து விலகி, நினிவே பட்டணத்துக்கு கிட்டதட்ட நேர் எதிராக இருக்கும் தர்சீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து யோப்பாவுக்குப் போனான். யோப்பா பட்டணம் நினிவேயிலிருந்து ஒரு 80 கீ.மீ தூரத்தில் இருந்த பட்டணம். இந்த தூரத்தை அவன் எப்படிக் கடந்தான் என்று தெரியவில்லை. ஒருவேளை ஓட்டமும், நடையுமாக சென்றிருப்பானோ? அதினிமித்தமே கப்பலின் அடித்தட்டில் அயர்ந்து தூங்கியிருப்பானோ? [வசனம் 5] யோப்பாவில் புறப்படத் தயாராயிருந்த ஒரு கப்பலைக் கண்டு கூலி கொடுத்து, கர்த்தரின் சமூகத்தினின்று விலகும்படி தர்சீசுக்குப் போகக் கப்பல் ஏறினான் [1:3] சாத்தான் எப்பொழுதும் கர்த்தருக்கு விரோத மாகச் செய்வதற்கான வாய்ப்புகளை தயாராக வைத்திருப்பான்.

ஆனால், கர்த்தருடைய சமூகத்தை விட்டு விலக முடியுமா? சங்கீதம் 139 ஐ இந்தத் தீர்க்கன் படிக்கவில்லையோ அல்லது படித்து மறந்துவிட்டானோ? அங்கே தாவீது எவ்வளவு தெளிவாகக் கூறி யுள்ளான் பாருங்கள். **உம்முடைய ஆவிக்கு விரோதமாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன் ?** என்று [சங். 139:7]. சாத்தானுக்கு நம்மைத் தாரை வார்த்து விட்டால், இப்படித்தான் நம் மூளை மழுங்கிப்போகும்.

இந்தப் பயபக்தியுள்ளவனின் துணிகரச் செயலைக்கண்ட தேவன் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். ஆம். **கர்த்தர் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்** [கலா 6:7]. அங்கே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரியக் கொந்தளிப்பு. கப்பற்காரர் பயந்து தன் தன் தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். மரணபயம் யாரைவிட்டது! ஆனால், அவர்கள் கூப்பிட்ட அவர்களின் விக்கிரகங்களால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. தங்கள் தெய்வங்கள் தங்களைக் காப்பாற்ற முடியாது என்பதைப் புரிந்து கொண்ட கப்பற்காரர். கப்பல் பாரத்தை லேசாக்கிப் பார்க்கலாம் என்று முயற்சித்தனர். ஆயினும் எதுவும் வேலைக்கு ஆகவில்லை. கப்பல் தொடர்ந்து அலை பாய்ந்தது கப்பல் முழுவதும் மரண ஓலம். ஆனால், இந்தப் பயபக்தியுள்ள யோனா தீர்க்கன் அடித்தட்டில் அயர்ந்த நித்திரையில் இருந்தான்.

ஆனால், எந்த ஓலமும் இந்த யோனாவை அசைக்க முடியவில்லை. எப்படியோ இவனை எழுப்பி, உன் தேவனை நோக்கி வேண்டிக் கொள்; என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், இந்தப் பயபக்தி யோனா தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணிய தாகத் தெரியவில்லை. எந்த மூஞ்சியைக் கொண்டு, அவனால் விண்ணப்பம் பண்ண முடியும்? அடுத்த முயற்சி சீட்டு போடுதல். எப்படியாவது தப்பிக்க வேண்டுமே. சீட்டு பயபக்தியுள்ள இந்த யோனா பேரில் விழுந்தது. அப்பொழுது அவர்கள் யோனாவைப் பார்த்து ஒரு நான்கு கேள்விகள் நறுக்கென்று கேட்கிறார்கள். கிடுக்கிப்பிடியில் சிக்கிக் கொண்ட யோனா இவ்விதம் பதில் தந்தான். நான் எபிரெயன், சமுத்திரத்தையும், பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் **பயபக்தியுள்ளவன்** என்று. (1:9) பயபக்தியுள்ளவன் என்று இவனாகத்தான் சொல்லிக்கொண்டான். தேவன் சொல்லவில்லை. யோபு போன்றவர்களை தேவன் உத்தமன், சன்மார்க்கன் என்று அழைத்துள்ளார் ( யோபு 1:1. அவன் **கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி** ஓடிப்போகிறவன் என்று அவர்களுக்கு அறிவித்ததினால், அந்த மனுஷர் **மிகவும் பயந்து,** அவனை நோக்கி**: நீ ஏன் இதைச் செய்தாய்** என்றார்கள் (யோனா 1:10) மெய்யான தேவனிடத்தில் பயபக்தியுள்ளவன் என்று சொன்ன யோனாவைப் பார்த்து, பொய்யான தேவனை நம்புகிறவர்கள் நீ ஏன் **இப்படிச் செய்தாய்** என்று ஓங்கிக் கன்னத்தில் அறைவதுபோல் கேட்டுள்ளார்கள். தேவையா இந்த யோனாவுக்கு! யோனாவைப் பற்றிய எஞ்சிய காரியங்கள் அநேகராகிய தெரியுமாதலால் இத்தோடு நிறுத்திக் கொண்டு, இந்தப் பய பக்தியுள்ளவனிடமிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று கவனிப்போம்.

I **பயபக்தியுள்ளவன் தேவக்கட்டளையை ஏற்று நடக்க வேண்டும்**

யோனா தீர்க்கனிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், பயபக்தியுள்ளவன் தேவக் கட்டளைகள் ஒவ்வொன்றுக்கும் கீழ்ப்படிய வேண்டுமென்பது.

யோனா ஒரு தீர்க்கன், தேவக் கட்டளையின்படி செய்ய வேண்டியவன். அத்தோடு பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன் என்றும் சொல்லிக் கொண்டவன். அப்படியானால், கர்த்தர் நினிவேக்குப் போகச் சொல்லும் போது என்ன செய்திருக்க வேண்டும்? சாமுவேல் பிள்ளையாண்டான் போல் **கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்** (I சாமுவேல் 3:10) என்று செயல்பட்டிருக்க வேண்டும். ஆபிரகாம் போன்ற தேவ மனிதர்கள் அப்படித்தானே செய்துள்ளார்கள். **உன் புத்திரனும், உன் ஏகசுதனும், உன் நேச குமாரனாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே,**

**நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகனபலியிடு** (ஆதி 22:2) என்று கேட்டபோது, அவன் **அதிகாலையில் எழுந்தல்லவா** சென்றான். அய்யோ, என் மகனை கேட்கிறாரே, நான் 25 ஆண்டுகள் காத்திருந்து பெற்ற மகனை எப்படி பலி செலுத்த முடியும், எங்காவது போய் விடுகிறேன் என்று ஓடிப் போனானா?

தேவன் ஆபிரகாமிடம் கேட்டது போல் அப்படி என்ன மனதைப் பதற வைக்கும் காரியத்தையா யோனாவைச் செய்யச்சொன்னார்? இல்லையே! பிறகென்ன? தேவன் இரக்கமுள்ளவராயிருந்து நினிவே பட்டணத்தார் மனந்திரும்ப வாய்ப்புக் கொடுத்தால் இவனுக்கென்ன? பாவம் செய்கிறவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பது யோனாவின் எண்ணம். அதில் பெரிதாகத் தவறு இல்லை. அதற்காக, மனந்திரும்ப வாய்ப்பே கொடுக்கக் கூடாது என்பது எப்படி சரியாகும்? பெரு வெள்ள அழிவுக்கு முன்னால் கூட தேவன் நோவாவைக் கொண்டு 120 ஆண்டுகள் பிரசங்கித்த பிறகு தானே உலகத்தை அழித்தார். நான் நினைப்பது போல் தேவன் செய்ய வேண்டுமென்பது எப்படிச் சரியாகும்?.

தேவனைப் பற்றிய புரிதலும், தேவ வார்த்தையைப் பற்றிய பயமும், தேவச் சித்தம் பற்றிய சிந்தையும் இல்லாதவனாக, யோனா இருந்துள்ளானே! போதாக் குறைக்குத் தன்னைப் பக்தியுள்ளவனென்று சொல்லிக் கொள்கிறான். இதன் விளைவு? மூன்றாம் வசனத்தைப் பாருங்கள். அப்பொழுது யோனா **கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி,** தர்ஷீசுக்குப் போகும்படி எழுந்து யோப்பாவுக்கு போய், தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, கூலி கொடுத்து, தான் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகும்படி அவர்களோடே தர்ஷீசுக்குப் போகும்படி கப்பல் ஏறினான். (வசனம் 4) இவ்வசனத்தில் **இரண்டு முறை** கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி, விலகும்படி என்று வருகிறது. இவன் கீழ்ப்படியாமை தேவ சமூகத்திலிருந்து விலகும்படி செய்தது. புரிகிறதா? கீழ்ப்படிதலில்லாத பக்தியாலே பத்துப் பைசாவுக்கு பிரயோஜனம் இல்லை என்று.

அன்பானவர்களே! ஆன்ம வாழ்வில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? நம் பக்தி எப்படிப்பட்டதாக உள்ளது? மத் 7:22 ல் தங்களைப் பக்தியுள்ளவர்களாக எண்ணி, தீர்க்கதரிசனம் உரைத்தோம், பிசாசுகளைத் துரத்தினோம், அற்புதங்கள் செய்தோம் என்பவர்களைப் பார்த்து.... **அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்** என்று இயேசு சொன்னதையல்லவா யோனாவின் செயலும், விளைவும் நமக்கு நினைவுபடுத்துகிறது. ஆகையால் , நாம் பக்தியுள்ளவர்கள் என்று நினைப்பதோடும், சொல்வதோடும் நிற்காமல், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் தேவன்

சொல்லியிருக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் நாம் முக்கியத்துவம் தந்து அப்படியே கீழ்ப்படிய வேண்டும். இதன் மூலம், தேவ சமூகத்தி லிருந்து விலகாமலும், அந்நாளில் அவர் சமூகத்திலிருந்து விரட்டப்படாமலும் பார்த்துக் கொள்ள முடியும்.

## II பக்தியுள்ளவன் பிறருக்கு பாதிப்பு வராமல் நடக்க வேண்டும்.

யோனா தீர்க்கனிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், பயபக்தியுள்வன் பிறருக்குப் பாதிப்பை ஏற்படுத்தா வண்ணம் வாழ வேண்டும் என்பது.

யோனா தீர்க்கன் தேவன் தனக்குக் கொடுத்த வருமானத்தி லிருந்து கப்பலுக்கு கூலி கொடுத்து, வருமானத்தைக் கொடுத்த தேவனுக்கு, இன்னும் தீர்க்கதரிசன ஊழியத்துக்குத் தன்னை அழைத்த தேவனுக்கு விரோதமாகச் செயல்படத் துணிந்தான். விடுவாரா கர்த்தர்? சமுத்திரத்தின் மீது பெருங்காற்றை அனுப்பினார். காற்றும், கடலும், அவருக்குக் கட்டுப்பட்டவைகள் தானே! அங்கே கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க ஒரு பெரிய கொந்தளிப்பு. கப்பலில் கப்பற்காரர் உட்பட எத்தனை பேர் இருந்தார்களோ தெரியாது. ஆனால், எல்லாரும் அலறித் துடித்திருப்பார்கள். கப்பலில் இருந்தவர்களுக்கும், கடல் கொந்தளிப்புக்கும் எவ்வித சம்பந்த முமில்லை. யோனா ஏறினதற்குப் பிறகு ஓரே கொந்தளிப்பு. பாவியாகிய ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான் (பிரசங்கி 9:18) என்று ஞானியைக் கொண்டு ஆவியானவர் சொல்லுகிறதை இது நினைவுபடுத்துகிறதே. நன்மையைக் கொடுக்கும்படி தேவன் போகச் சொன்னால், இவனோ பிறருடைய உயிரை எடுக்கிறவனாக மாறிவிட்டான். ஓர் ஆகான் நிமித்தம் ஓட்டுமொத்த இஸ்ரவேலுக்கும் தோல்வி வந்தது போல் ( யோசுவா 7:1) ஒரு யோனா நிமித்தம் ஓட்டுமொத்த கப்பலும் ஆட்டம் கண்டது.

இவ்வளவு பிரச்சனை நடக்கிறது. இந்த யோனா தன்னைச் சுற்றி நடப்பவைகளைக் குறித்து எவ்விதக் கவலையும் இல்லாமல் கப்பலின் அடித்தட்டில் அயர்ந்து தூங்குகிறான். எப்படி? ஒரு தேவ மனிதனுக்கான லட்சணமா இது? அழுகிறவர்களுடனே அழுங்கள் (ரோமர் 12:15) என்றெல்லாம் நாம் வாசிக்கும் போது யாரோ எப்படியோ போகட்டும் என்று இருந்திருக்கிறானே தேவனிடத்தில் பயபக்தியாய் இருந்த இந்த யோனா! தேவனையும், அவர் சமூகத்தையும் விட்டு விலகும் போது எதைப் பற்றியும் கவலைப்படாத ஓர் உணர்வற்ற நிலைக்குப் போய்விடுகிறோமோ!

அருமையானவர்களே, இங்கே நாம் சற்று சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம். பலருடைய ஆவிக்குரிய வாழ்வில் இப்படித்தானே நடக்கிறது. தேவனை விட்டும், தேவனுடைய வார்த்தையை

விட்டும். கிறிஸ்துவை விட்டும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை விட்டும். கிறிஸ்து தம் இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த சபையை விட்டும் விலகும் போது இது உண்மையாகவல்லவா இருக்கிறது! தங்களைப் பற்றி உணர்வற்றவர்களாக, தங்கள் சரீர குடும்பம் பற்றி உணர்வற்றவர்களாக, தாங்கம் அங்கம் வகித்த ஆவிக்குரிய சபையைப் பற்றி உயர்வற்றவர்களாக, தங்கள் ஆத்துமாக்களை பற்றி உணர்வற்றவர்களாக மாறி விடுகிறார்களே! தங்கள் முடிவால், தங்கள் செயலால், தங்கள் குடும்பம், பாதிப்புக் குள்ளாவதையும், ஆவிக்குரிய குடும்பத்தில் மற்ற விசுவாசிகளுக்கு இடறல் வருவதையும், சபையில் பிசாசு இவர்களைக் கொண்டு பிரிவினை ஆவியை ஏவுவதையும் பற்றிக் கவலைப்படாமல் இருப்பதுமட்டு மன்றி, தங்கள் ஆத்துமா நரகத்தின் பாதையில் போய் கொண்டிகருப்பதைக் கூட உணர முடியாத நிலைக்கு இந்த யோனா போல் போய்விடுகிறார்களே!

பவுலடியார் கப்பலில் ரோமுக்குச் சென்ற போது, தேவச் சொல்லை மீறியதினிமித்தம் யூரோக்கிலிதோன் புயலில் சிக்கி கப்பல் தவித்தது அப்போது பவுலினிமித்தம் கப்பலில் இருந்தவர்கள் காப்பாற்றப்பட்டது போல [அப்:27:14-21] நமது நிமித்தம் பிறருக்கு நன்மையும், பாதுகாப்பும், ஆசீர்வாதமும் கிடைக்க வேண்டுமே யொழிய, நமது நிமித்தம் பிறருக்கு ஆவியிலும், சரீரத்திலும் அழிவு வரக்கூடாது. எச்சரிக்கையாயிருப்போம்.

III **பயபக்தியுள்ளவன் குற்றம் சாட்டப்படாமல் நடக்க வேண்டும்.**

யோனா தீர்க்கனிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், நாம் பயபக்தியுள்ளவர்களாயிருக்கும் போது பிறரால் குற்றஞ்சாட்டப்படாதவர்களாய் நடந்து கொள்ள வேண்டும்.

அயர்ந்த நித்திரையாய் இருந்த யோனாவை மாலுமி எழுப்பி, உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்.... சுவாமி ஒரு வேளை நம்மை நினைத்தருளுவார் என்றான். தமிழ் வேதாகமத்தில் சுவாமி என்ற வார்த்தைதான் உள்ளது. அதாவது கர்த்தர், தேவன் என்று உச்சரிக்கத் தெரியாதவன் இவனை நோக்கி **வேண்டிக்கொள்** என்று சொல்லியுள்ளனர். ஏன் இந்தப் பயபக்தியுள்ள யோனாவுக்கு ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு [ சங் 50:15] என்ற வசனம் நினைவில் இல்லையா? நிலைமையைப் பாருங்கள். யார் யாருக்கு என்ன சொல்லிக் கொடுக்க நேரிடுகிறது என்று. இது எதினால்? தேவக் கட்டளையை மீறி, உணர்வற்ற நிலைக்கு போனதால் தானே!

இத்தோடு முடிந்ததா என்றால் இல்லை. அவர்கள் பாணியில் சுவாமி குத்தத்துக்கு யார் காரணம் என்ற முயற்சியில் கப்பற்காரர் இறங்கி, சீட்டு போட்டு, யோனாவைக் கூண்டில் ஏற்றி, நான்கு கேள்விகளைக் கேட்ட பிறகு

யோனா எப்படியோ உணர்வடைந்து, வழிக்கு வந்து, தான் யார் என்பதை வெளிப்படுத்துகிறான். அங்கே நான் எபிரெயன் என்பது சரி, ஆனால், நான் பயபக்தியுள்ளவன் என்பது எப்படிச் சரியாகும்? பிரசங்கி 12:13, **தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்** என்று கூறுகிறது. அப்படியானால். தேவனிடத்தில் பயந்து பக்தியாய் நடப்பவன், தேவக் கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும் தானே. ஆனால், தேவக் கட்டளையை அப்பட்டமாக மீறிவிட்டு, தன்னை கர்த்தர் இடத்தில் பயபக்தியுள்ளவன் என்று எப்படிச் சொல்லமுடிந்ததோ தெரியவில்லை. ஆன்ம வாழ்வில் சொல்லுக்கும், செயலுக்கம் எப்பொழுதும் சம்பந்தம் இருக்க வேண்டும். இந்த முன் மாதிரியைத்தான் இயேசு ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். **செய்யவும், உபதேசிக்கவும்** என்று (அப். 1:2).

அவன் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகிறவன் என்பதைக் கப்பற்காரர் கேட்ட போது, **மிகவும் பயந்து ஏன் இதைச் செய்தாய்?** என்று கேட்டுள்ளார்கள் (1-10). எனக்கு இங்கே மிகப்பெரிய ஆச்சரியம். பயபக்தியுள்ள யோனா கர்த்தருடைய சமூகத்தை விட்டு விலகி ஓடும்போது அவனுக்குள் **கொஞ்சமும் பய மில்லாமல்** துணிந்து செயல்பட்டான். ஆனால், கர்த்தரை அறியாத இந்த ஜனங்கள் விலகி ஓடிப்போகிறவன் என்பதைக் கேட்ட மாத்திரத்தில் **மிகவும் பயந்தார்கள்.** இங்கே யோனாவின் நிலைமை இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தின் நிலையை அப்படியே பிரதிபலிக்கிறதாக உள்ளது. தங்களைப் பயபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற அநேகருக்கு தேவக் கட்டளைகளை, கிறிஸ்துவின் பிரமாணங்களை மீறி விலகிப் போகிறோம் என்று பயம் மருந்துக்கும் இருப்பதில்லை. ஆம், தேவகட்டளைகளை பகிரங் கமாக மீறி நடந்து கொண்டு தங்களைத் தேவபக்தியுள்ளவர்கள் என்றும் மார்தட்டுகிறார்கள். இவர்களை எண்ணி பரிதாபப்படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்!

அந்த மனிதர், அவனை நோக்கி: நீ ஏன் இதைச் செய்தாய் என்று (வசனம். 10) அங்கே, குற்றப்படுத்தினார்கள். நினிவே பட்டணத் துக்குச் சென்று **நீங்கள் ஏன் இப்படி தேவனுக்கு விரோதமாகச் செய்கிறீர்கள்** என்று கடிந்து கொண்டு எச்சரிக்க வேண்டிய வனைப்பார்த்து, கர்த்தரின் வாடையே இல்லாதவர்கள் குற்றப்படுத்து கிறார்கள். யோனாவுக்கு, இது தேவையா? தேவக் கட்டளையை மீறும் போது எப்படி எல்லாம் அவமானப்பட நேரிடுகிறது பாருங்கள்.

ஆகையால், அருமையானவர்களே! தேவனுக்குப் பயப்படுகிற நாம் ஒழுக்கரீதியாகவும், பக்திரீதியாகவும், உபதேச ரீதியாகவும் பிறரால் குற்றம் சாட்டப்படாத ஒரு மேம்பட்ட பக்திவாழ்வை மேற்கொள்ள வேண்டும். கண்டிப்பாக இந்த யோனா போல் வேண்டாம். சரியா?

**தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!**

# புதிய ஏற்பாட்டு ஒற்றுமை

Bro. J.C. **சோட்**

சென்ற மாத தொடர்ச்சி...

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் ஒற்றுமைக்காக ஜெபித்தார். யோவான் 17:20,21, நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்கிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர் களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன் என்றார். இங்கே, கிறிஸ்துவானவர் அப்போஸ்தலர்களுக்காக ஜெபித்தார். மேலும், அவர்களுடைய வார்த்தையினாலே தம்மை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் ஜெபித்தார். அப்போஸ்தலர் சம்பந்தமாக கிறிஸ்து சொல்லும் போது, அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் என்று ஜெபித்தார். இது எந்த அளவுக்கு ஒன்றாயிருக்க வேண்டுமென்று பார்க்கும் போது நானும் பிதாவும் ஒன்றாயிருப்பது போல என்று சொல்லுகிறார். இதுதான் உண்மையான ஒற்றுமையாகும்.

பவுலின் எழுத்துக்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, அதிலே ஐக்கியத்திற்கான ஆதாரம், போடப்பட்டிருப்பதைக் காணமுடியும். எபே.4:1-6, ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், ஒரே பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும், எல்லோரோடும், உங்கள்

எல்லோருக்குள்ளும் இருக்கிறவர். இங்கே சொல்லப்பட்டிருக்கிற காரியங்களில் எத்தனை ஒன்றுகள் உள்ளன? ஒரே ஒரு ஒன்றுதான் உள்ளது.

இவ்வுலகில் மெய்யான சபை ஒன்று உண்டு, அந்த சபையானது கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருக்கிறது. அது ஒரே மாதிரியான சுவிசேஷத்தைப் போதித்துக் கொண்டும், நடைமுறைப்படுத்திக் கொண்டும் வருகிறது. மறுமுனையில் மத உலகில் சிலர், கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லோருமே, ஒரு பெரிய ஆவிக்குரிய குடையின் கீழ்தான் இருக்கிறார்கள் என்று சொல்லுகின்றனர். ஆனால், பவுலுடைய எச்சரிப்பின்படி, நாம் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாகப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலக வேண்டும். பிரியமானவர்களே! நிச்சயமாக எல்லோருக்கும் அந்தக் குடையின் கீழ் நிழலும், பாதுகாப்பும் கிடைக்காது. உண்மையான உபதேசத்திற்கு விரோதமான மற்றும் வித்தியாசமான உபதேசம் போதிக்கப்படும்போது, அந்த உபதேசம் பிரிவினையை உண்டாக்குகிற படியால் தேவன் அதைக் கடுமையாகக் கண்டிக்கிறார்.

எனதருமை நண்பர்களே! தேவன் நமக்கு ஒரேயொரு புத்தகத்தை அதாவது வேதாகமத்தைத் தந்திருக்கிறார். நாமெல்லோரும் அதை வாசித்து, விசுவாசித்து, அதன் போதனைகளுக்குக் கீழ்ப்படியும்போது, ஒரே மாதிரியான போதனைக்கு நாம் கீழ்ப்படிகிறவர்களாயிருப்போம். அப்போது அந்த ஒரே போதனைக்கு தங்களைக் கீழ்ப்படுத்துகிறவர்கள், ஒரே சபையில் சேர்க்கப்படுவார்கள், ஒரே மாதிரியான பெயரைத் தரித்திருப்பார்கள், தேவனை ஒரே மாதிரியாக ஆராதிப்பார்கள். ஆகையால், வேதாகமம் நமக்குள் ஒரு போதும் பிரிவினையை உண்டாக்காமல் தேவனோடு நம்மை இணைத்து வைக்கும். மேலும், நாம் கிறிஸ்துவானவர், நாம் பிறந்திருக்கும்படியாக ஜெபிக்கவில்லை. மாறாக, நாமெல்லாரும் ஒன்றாகயிருக்கும் படிதான் ஜெபித்தார். ஆகையால், நாம் தேவசித்தத்தை செய்யவில்லையென்றால் ஒற்றுமையாக இருக்க முடியாது. அதே வேளையில் அவருடைய சித்தத்தைச் செய்யும்போது நாம் என்றென்றும் கிறிஸ்துவுக்குள் ஒற்றுமையாயிருக்க முடியும். ✝

பெண்கள் பகுதி

# பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவம்

Sis. **ரேச்சல் நாயகம்**

**செப்டம்பர் மாத தொடர்ச்சி ...**

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஸ்தோத்திரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவம் பற்றி தொடர்ச்சியாக இம்மாதம் சில கருத்துக்களை கவனமாகப் படித்து பயன்பெறுவோம்.

III **பழைய ஏற்பாடு நமக்கு போதனையாக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது.**

தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. [ரோமர் 15:4]. ரோமர் 15–ம் அதிகாரம் முதல் பகுதியில் பவுல், பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளை மேற்கோள் காட்டுகிறார். அதில் முக்கியமானது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான ஐக்கியம், அவர் நமக்குக் கொடுத்த நம்பிக்கை. இதுவே பழை ஏற்பாட்டின் மேன்மையையும், அது நமக்கு பொறுமை, ஆறுதல், நம்பிக்கை இவைகளை கற்றுக் கொடுக்கிறது.

பழைய ஏற்பாட்டில் யோபுயும் பற்றி படிக்கும் போது, ஒருவர் பொறுமையை பெற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது. எல்லாப் பாடுகளையும் சகித்துக் கொள்ளும் பாடம் யோபின் புத்தகம் முழுவதும் நிறைந்து காணப்படுகிறது. புதிய ஏற்பாடும் யோபை நினைத்து யாக்:5:11ல் இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே ! யோபுவின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள். கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள், கர்த்தர் மிகுந்த உருக்கமும், இரக்கமுமுள்ளவரா யிருக்கிறாரே என்று வாசிக்கிறோம்.

பழைய ஏற்பாட்டில் சங்கீதங்களை வாசிக்கையில் நமக்கு ஆறுதல் கிடைக்கிறது. சங்கீதங்களை எழுதிய வெவ்வேறு ஆசிரியர் கள் தங்களுடைய கடினமான நேரங்களில், அதாவது வியாதி, உபத்திரவம், பாவம், சோதனை நேரங்களில் தேவனை நோக்கி கதறி அழுது, அவருடைய கற்பனைகளை ஏற்றுக்கொண்டு, தங்க ளுடைய பிரச்சனைகளிலிருந்து விடுதலையாகியுள்ளனர். சங்கீதம் – 119– ல் உள்ள 3 வசனங்கள் பழைய ஏற்பாட்டில் எப்படி ஒருவனை தேற்றுகிறது என்பதை அதை வாசிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

சங் . 119 வசனம் 50 அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது. வசனம் 75 நீர் உமது அடியேனுக்கு கொடுத்த உமது வாக்கின்படி, உமது கிருபை என்னை தேற்றுவதாக வசனம் 82, எப்பொழுது என்னை தேற்றுவீர் என்று உம்முடைய வாக்கின்மேல் நோக்கமாய் என் கண்கள் பூத்துப் போகிறது. கவிதைகள் அநேகமாக மக்களின் கடினமான நேரத்திற்கு உதவுகின்றன. உலகத்திலே தலைசிறந்த கவிதை ஒன்று உண்டு என்று சொன்னால் அது சங்கீத புத்தகம்தான்.

மேலும், பழைய ஏற்பாடு நம்பிக்கையை கொடுக்கிறது. எபிரெயர் – 11–ம் அதிகாரத்தை வாசிக்கும்போது அது விசுவாச வீரர்களின் அதிகாரம் என்று மட்டும் நினைக்கிறோம். ஆனால், அதை வாசிக்கும்போது எவ்வளவு நம்பிக்கை அடங்கியுள்ளது என்று சிந்தித்திருக்கிறோமா? பழைய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்த அத்தனை பேருடைய விசுவாசமும் நம்பிக்கையின் அடிப்படையில் இருந்தது. நம்பிக்கையும், விசுவாசமும் சேர்ந்துதான் அவர்களை தேவனுக்கு கீழ்ப்படிய வைத்து அவருடைய ஆசீர்வாதத்திற்கு காத்திருக்க வைத்தது. ரோமர் 15–ம் அதிகாரத்தில், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நாம் ஒருவருக்கொருவர் பிறர் நலனுக்காக இப்படித்தான் இருக்க வேண்டும் என்று போதிக்கிறது. பழைய ஏற்பாட்டின் மகா பெரிய உண்மைகளை கடைபிடிக்கவேண்டும். ரோமர் 15 : 1–12 வசனங்களில் பவுல் கூறியுள்ளபடி செய்யும்பொழுது நாம் ஒற்றுமையான, சந்தோஷமான, சமாதானமுள்ள, விசுவாசமுள்ள, நம்பிக்கையுள்ள அங்கத்தினர்களாக சபையில் இருக்கமுடியும். ரோமர் 15:13 பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக என்று பார்க்கிறோம்.

IV **நிழல்களால் நிரப்பப்பட்டது பழைய ஏற்பாடு :**

இப்படியிருக்க நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது (எபி : 10:1).

நிழல்கள் தவறாக வழிநடத்தக் கூடியவைகள். பொருட்களுடைய வடிவம், அமைப்பு இவைகளை தவறாக புரிந்து கொள்ளும்படிய இந்த நிழல்கள் செய்துவிடும். வெளிச்சம் வருகிற திசையைப் பொருத்து, சிறிய குள்ளமான நபர், பெரிய உயரமான நபராக தோற்றமளிக்க முடியும் நிஜமாக ஒருவரை நேரில் பார்க்கும் போது தான் அவருடைய உண்மையான தோற்றத்தை சொல்ல முடியும். இங்கே எபிரெய ஆசிரியர் வரப்போகிற நன்மையான சட்டம் பற்றி விளக்குகிறார். ஆராதனை என்று எடுத்துக் கொண்டால், பழைய ஏற்பாட்டில் அது முழுமையானதாக இல்லை. ஏனென்றால் ஆராதனை செய்கிறவர்களை அது இரட்சிப்பதுமில்லை, முழுமையடையச் செய்வதுமில்லை. மோசேயின் பிரமாணம் தேவனுடைய பிரமாணம், எனவே, அது ஒரு நல்ல பிரமாணம். எந்த நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டதோ அதற்கு போதுமான தாயிருந்தது. ஆனால், அது கடைசி வரை நிலைத்திருக்கும் படியாகக் கொடுக்கப்படவில்லை. [கலா : 3: 19].

மோசேயின் பிரமாணம் அநேக காரியங்களின் நிழலா யிருக்கிறது. வெண்கல கொள்ளிவாய் சர்ப்பம் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவுக்கு நிழலாய் இருந்தது. [எண் 21:4-9]; [யோவான் 3:14-16]. ஆசரிப்புக் கூடாரம் புதிய ஏற்பாட்டு ஆராதனை யின் ஒழுங்கிற்கு நிழலாயிருந்தது ஆசாரியர்கள் மாத்திரமே ஆசரிப்புக் கூடாரத்திற்குள் செல்ல அனுமதி இருந்தது. எபி :8:1-4 வசனங்களில் அதற்கான விபரங்களை வாசிக்கலாம். புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் அதாவது கிறிஸ்துவின் உபதேசத்தில் எல்லாக் கிறிஸ்தவர்களும் ஆசாரியர்களே [I பேது 2:5,9]. மிருக பலியானது வரப்போகிற நன்மையான காரியத்திற்கு அடையாளமாக இருந்தது. நம் பாவத்தை போக்க நமக்காக கிறிஸ்து மரிக்க வேண்டியது அவசியமாயிற்று. [எபி :9:24-28]. பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த சிலரும் நமக்கு நிழலாயிருக்கிறார்கள். யோசுவா, ஆரோன், மெல்கிசெதேக்கு, தாவீது போன்றவர்கள் வரவிருந்த நன்மைக்கு நிழலாய் இருந்தார்கள். [எபி: 4:8-11:5:6-10; 7:1-3;11-15; அப் 2:25 :35; 13:36,37].

பழைய ஏற்பாட்டின் ஓய்வு நாள் பிரமாணம் கூட வருங் காலங்களுக்கு நிழலாயிருக்கிறது. [ கொலோ : 2:16,17]. என்று பவுல் கூறுகிறார். நிழலை ஒரு சட்டமாக்க முடியாது. பழைய ஏற்பாட்டின் பிரமாணங்கள் எல்லாம் நிறைவேற்றப் பட்டுவிட்டன. மீண்டும் அதற்குள்ளே சென்று ஒருவர் தேவனைப் பிரியப்படுத்த முடியாது.

துரதிஷ்டவசமாக இன்று உலகிலே நிஜத்தை விட்டு விட்டு, நிழலைப் பிடித்துக் கொண்டு தங்கள் பக்தி வாழ்வை நடத்து கிறார்கள். புதிய ஏற்பாட்டு **உபதேசத்துக்குக்** கீழ்ப்படிய மறுக் கிறார்கள். (கலா : 6:2, யாக் 1:25) யூதருக்கு கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாட்டை பிடித்துக்கொண்டு இருந்த எபிரெய கிறிஸ்தவர்களுக் காகவே அதாவது **புதிய ஏற்பாடு மேலானது** என்ற உண்மையை புரிந்து கொள்ளும்படி எழுதப்பட்ட நிருபம்தான் எபிரெயர். (எபி : 5:8,9) யூதர்கள் கானான் தேசத்தை தங்கள் இளைப்பாரும் இடமாகக் கருதி அதற்காக அலைந்தார்கள். **கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் நாம், நித்திய இளைப்பாறுதல் இடமான பரலோகத்தை நம்பிக்கையாக வைத்து வாழ வேண்டும்.**

அருமையானவர்களே, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட நாம், நம் நம்பிக்கையை குறித்துப் பேசி, பிறரையும் உண்மையான சத்தியத்திற்குள் கொண்டுவர பிரயாசை எடுப்போம். சத்தியத்தை நமக்குள்ளே அடக்கி வைக்காமல் சமுதாயத்திலுள்ள பிறரும் இந்த ஒன்றான மெய் சபையான கிறிஸ்துவின் சபைக்குள் அங்கமாக வேலை செய்வோம். அதற்கு தேவன் தாமே உதவி செய்வாராக! ஆமென்!

**தொடரும்....**

## இதுவே வழி

- கொடுத்தால் பெறுவாய் – லூக்.6:38
- விதைத்தால் அறுப்பாய் – கால.6:7
- அடங்கினால் உயருவாய் – 1பேது.5:6
- தாழ்த்தினால் கிருபை பெறுவாய் – 1பேது.5:5
- மன்னித்தால் மன்னிக்கப்படுவாய் – மத்.6:14
- இரங்கினால் இரங்குவார் – மத்.5:7

## வாலிபர் பகுதி

# இரட்டை நிலைப்பாடு

Dr. **ஏபில் நாயகம்**

அன்பு சகோதர, சகோதரிகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். கொரோனா பெருந் தொற்று நோயினுடைய தாக்கம் சற்றுக் குறையத் தொடங்கி யுள்ளது. அன்றாட வாழ்க்கையும் பல இடங்களில் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. நல்ல விஷயந்தான். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் இந்த கொரோனா வைரஸ் வேறொரு நோயை ஏற்படுத்தியுள்ளது. **விசுவாச தொய்வு** என்ற கொடிய நோயை இந்த ஊரடங்கு மற்றும் வழிபாட்டுத்தலங்களில் கூட அனுமதி இல்லாத காலங்களில் இந்த வைரஸ் ஏற்படுத்தியுள்ளது. நோய் உணர்ந்து, அதன் அறிகுறிகள் இப்பொழுது வெளியே தெரிய ஆரம்பித்துள்ளது. இது வேதனையான ஒன்று.

ஆன்லைன் ஆராதனை, வாட்ஸ்அப் ஆராதனை. கூகுள் மீட் ஆராதனை என்று பல வழிகளில் நாம் ஆவியிலே ஒன்றுபட இச்சமூக வலைதளங்கள் நமக்கு உதவுகின்றன என்று எண்ணி மகிழ்ந்த அதே வேளையில், வீட்டிலேயே ஆராதனை செய்யலாம். சபைக்கு, போகத் தேவையில்லை என்றும். கர்த்தருடைய நாளில் ஆராதனையில் விரும்பிய நேரத்தில் பங்கு பெறலாம், சபை ஒழுங்கை கடைபிடிக்கத்தேவையில்லை, என்றும், தனிப்பட்ட வேலை இருந்தாலும், குடும்ப வேலை இருந்தாலும் பரவாயில்லை. அதை முடித்துவிட்டு ஏதாவது ஓர் ஆன்லைன் ஆராதனையில் பங்கு பெறலாம் என்றும், இப்படிப் பல விஷ சிந்தனைகளை பலர் மனதில் பிசாசானவன் விதைத்துவிட்டான். அவனுக்கு இது மகப்பெரிய வெற்றி. தேவனுடைய காரியங்கள் என்று வரும் பொழுது, நாம் இரட்டை நிலைப்பாடு கொண்ட மக்களாக இருக்கிறோமா என்று எண்ணத் தோன்றுகிறது. தேவன் மீது நமக்கு இருக்கும் அன்பையும், உறவையும் இப்படி நாம் பங்கு போட கூடாது. அப்படி பங்கு போடப்படும் பட்சத்தில் தேவனுடைய காரியங்கள் இரண்டாம் பட்சமாக மாறும் அபாயம் உள்ளதை நாம் உணர வேண்டும்.

ஆகாய் தீர்க்கனுடைய நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேல் ஜனங்களின் மனநிலையும் இப்படித்தான் இருந்தது. பாபிலோனி யரிடம் அடிமைகளாயிருந்து விட்டு மீண்டும் எருசலேம் திரும்பிய வர்கள் இரட்டை நிலைப்பாடு கொண்டவர்களாக வாழ்ந்தார்கள். இதை தேவன் விரும்பாமல், ஆகாயின் மூலம் ஜனங்களுக்கு அதை உணர்த்தினார்.

சாலமோன் கட்டின தேவாலயம் பாபிலோனியராலே பாழக்கப்பட்டும், இடிக்கப்பட்டும் போனது. அடிமைத்தனத்தின் நாட்கள் முடிந்து சுமார் 15–16 ஆண்டுகள் ஆகியும் தேவனுடைய ஜனங்கள் அந்த ஆலயத்தை சீரமைக்கவும், கட்டவும் ஒரு முயற்சியும் எடுக்காமல் இருந்தார்கள். ஆனால், தாங்கள் குடியிருக்கும் வீடுகளை சிறந்ததாக கட்டி, அதிலே வாழ்ந்து வந்தார்கள். இது தான் இரட்டை நிலைப்பாடு. தங்கள் சொந்த வீடு என்று வரும்பொழுது சிறப்பானதாக இருக்க வேண்டும் என்று நினைத்த அவர்கள் தேவனடைய வீட்டை கண்டுகொள்ளவே இல்லை. இது தேவனுடைய பார்வையில் ஒரு குற்றமாகப் பார்க்கப்படுகிறது.

ஆகாய் 1:6 வது வசனத்தில், இந்த இரட்டை நிலைப் பாட்டினால், ஜனங்களுக்கு ஏற்பட்ட நிலைமையைப் பாருங்கள். **திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்தார்கள். புசித்தும் திருப்தியாகா திருந்தார்கள். குடித்தும் பரிபூரண மடையாமல் இருந்தார்கள். வஸ்திரம் உடுத்தியும் குளிர்விட வில்லை. கூலியை சம்பாதித்தும் மொத்தலான பைகளில் போட்டார்கள்.** அதாவது எவ்வளவு முயற்சி செய்தும் திருப்தியான ஒரு வாழ்வு அவர்களுக்கு இல்லாமல் போனது. நிறைவில்லாத வாழ்வே அவர்களுக்கு கிடைத்தது.

விதைத்தால் எப்படியும் விளையத்தானே போகிறது என்றும், சம்பாதித்தால் நிறைவு வரத்தானே போகிறது என்றும் அவர்கள் தப்புக்கணக்கு போட்டிருந்தார்கள். தேவனுடைய அருளும், தயவும் இல்லாமலே நிறைவான வாழ்வை வாழ்ந்துவிடலாம் என்று நினைத்தார்கள். ஆனால், மழையையும், விளைச்சலையும் கொடுப்பது தேவன் என்பதை அவர்கள் மறந்தார்கள் (9,10).

இரட்டை நிலைப்பாட்டோடே இருந்த அவர்களுக்கு கிடைத்த தண்டனை நிறைவில்லாத ஒரு வாழ்க்கை திருப்தியில்லாத வாழ்க்கை. எவ்வளவு முயன்றும் மகிழ்ச்சியை அவர்களால் பெற்றுக் கொள்ளவில்லை.

பிரியமானவர்களே! நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம்? இரட்டை நிலைப்பாடு கொண்ட மக்களாக இருக்கிறோமா? மத் 6:33 ன் பிரகாரமாய் எல்லாவற்றிலும் நாம் தேவனை முன்னிலைபடுத்து கிறோமா? அல்லது தேவனையும் தேவ காரியங்களையும் நாம் இரண்டாம் பட்சமாக்கினவர்களாக இருக்கிறோமா? சிந்தித்துப் பாருங்கள்.

ஆகாய் தீர்க்கன் மூலமாக அவர்களின் இரட்டை நிலைப்பாடு சுட்டிக்காட்டப்பட்டபொழுது ஜனங்கள் உணர்வடைந்து, பின் தேவ னுக்கு பயந்திருந்தார்கள். அதன்பின்பு ஜனங்கள் தேவாலயத்தை கட்டும் பணியில் ஈடுபட்டார்கள். அப்பொழுது தேவன் **நான் உங்க ளோடு இருக்கிறேன்** என்று சொல்லி ஜனங்களை தேற்றினார்.

இன்றைய நாட்களில், தேவ பிள்ளைகளாகிய நம்மையும் நான் உங்களோடு இருக்கிறேன் என்று இயேசு தேற்றுகிறார். ஆனால், எதைப் பற்றி பேசும் போது இதைச் சொல்கிறார் என்பதை நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். மத். 28:18–20 வசனங்களில் தேவப் பணியாகிய சுவிசேசத்தை பிறருக்கு கூறும் பணியைப் பற்றிப் பேசும் போது அந்த வார்த்தைகளை அவன் பயன்படுத்துகிறார்.

தேவனுடைய வீடு, சபை என்று வரும் பொழுது அதை சார்ந்த பணிகளில் இரட்டை நிலைப்பாடு இருக்கக்கூடாது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அன்று தம் ஜனங்கள் தேவாலய பணிகளை கிடப்பில் போட்டு தங்கள் வேலைகளில் மட்டும் ஈடுபட்ட பொழுது தேவன் அவர்களுக்கு நிறைவில்லாத வாழ்வைக் கொடுத்தார். ஆனால், அதே ஜனங்கள் அதை உணர்ந்து தேவாலய பணிகளை செய்த பொழுது நான் உங்களோடு இருக்கிறேன் என்றார்.

இன்று நம்மிடம் – உலகமெங்கும் போங்கள் என்றும், சுவிசேஷசம் சொல்லுங்கள் என்றும் கூறி, உலகத்தின் முடிவு பரியந்தம் **உங்களோடு இருக்கிறேன்** என்று தேற்றுகிறார். அப்படியானால், சபையில், சபை காரியங்களில், ஊழியத்தில் நம் பங்கு இருந்தால். அந்தத் தேறுதலான வார்த்தைகளுக்கு நாம் சொந்தகாரராக முடியும். தேவன் நம் பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்? [ரோமர். 8:31]. தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற சிந்தைக்கு ஈடு வேறே ஏதாகிலும் உண்டா? அதற்கு ஈடாக நம் முயற்சியால் எதையாவது ஏற்படுத்திக்கொள்ள முடியுமா? சிந்திப்போம். ✝

---

## கிறிஸ்தவனாயிருக்க...

✍ **வீண் பேச்சிற்கு விலகியிரு – 1கொரி.15:3**

✍ **மிஞ்சின எண்ணங்களுக்கு விலகியிரு – ரோ.12:3**

சிறுவர் பகுதி

# தீமையிலிருந்து விலகுதல்

Dr. பிரெய்சி

**ஹா**ய் குட்டீஸ், நீங்களெல்லாரும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வழக்கமான வாழ்க்கை முறைக்குத் திரும்பி பள்ளிக்குச் செல்வதால் மகிழ்ச்சியாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன். கடந்த மாதம் மற்ற பிள்ளைகளுக்கு நல்ல மாதிரியாயிருந்து வெளி உலகிற்கு நம் வெளிச்சத்தைப் பிரகாசிப்பதைக் குறித்து கற்றுக்கொண்டோம். பிரியமான பிள்ளைகளே, தொடர்ந்து நாம் நன்மை செய்து தீமையிலிருந்து விலகுங்கள்.

இம்மாதம் தீமை செய்வதிலிருந்து விலகுவது எப்படி என்பது பற்றி உங்களுக்கு நான் நம்மெல்லாரும் தானியல் பற்றியும் சிங்கெபி பற்றியும் நன்றாகத் தெரியும். ஆனால், இந்த மாதம் தானியேல் பற்றி வேறு ஒன்றை நாம் கவனிக்க உள்ளோம். தானியேல் 1ம் அதிகாரம், முதல் 7 வசனங்களில், பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக நிற்பதற்கு முன் இஸ்ரவேல் வாலிபர்கள் தங்களை போஷித்துக் கொள்ளும் படி திராட்சை ரசம் கொடுக்கப்பட்டது என்று பார்க்கிறோம். ஆனால், தானியேலோ, **ராஜாவின் போஜனத்தினாலும், அவர் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும் தன்னை தீட்டுபடுத்தலாகாது என்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு தன்னை தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான்.**

அன்பார்ந்த பிள்ளைகளே, நீங்கள் தீமையை விட்டு விலக வேண்டுமென்றால், தீமையை விட்டு விலக வேண்டுமென்று தானியேல் மனதில் தீர்மானித்தது போல் நாமும் தீர்மானிக்க வேண்டும். தானியேல் மனதில் செய்து கொண்ட தீர்மானத்தின் விளைவாக தேவன் தானியேலுக்குப் பிரதானிகளிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும் படி செய்தார் (1:9).

அதேபோல், இன்று பிள்ளைகளே, இக்கட்டுரையை வாசித்த பிறகு தீமை செய்யக்கூடாது என்று மனதில் தீர்மானித்துக்கொண்டு நல்லவர்களாக இருந்து எப்போதும் ஒளி வீசுங்கள். நீங்கள் சரியானவைகளைச் செய்யப் பாடுபட்டு கர்த்தருக்குநல்ல பிள்ளை களாக இருக்கும் போது தடைகளையும், சோதனைகளையும் மேற் கொள்ள தேவன் நிச்சயமாக நமக்கு உதவுவார்.

**மிகுந்த அன்புடன்**
**ப்ரெய்சி அக்கா.**

## இம்மாத கேள்விகள் [தானியேல் 1]

1. யார் நேபுகாத்நேச்சார்?

2. நேபுகாத்நேச்சார் தோற்கடித்த யூத ராஜாவின் பெயர் என்ன?

3. நேபுகாத்நேச்சாருக்கு முன்பாக கொண்டு வரப்படும்படி எப்படிப்பட்ட இஸ்ரவேல் பிள்ளைகள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்?

4. தானியேல் தீமையிலிருந்து விலக என்ன செய்தான்?

5. இந்தச் சூழ்நிலையை கடந்து வர தேவன் தானியேலுக்கு என்ன ஆசீர்வாதங்களைச் செய்தார்?

## ஊழியத்தை

- வீம்புக்காக செய்யாதிருங்கள்
- விளையாட்டாக செய்யாதிருங்கள்
- வேண்டா வெறுப்பாக செய்யாதிருங்கள்
- விளம்பரத்துக்காக செய்யாதிருங்கள்
- கட்டாயத்திற்காக செய்யாதிருங்கள்
- பார்வைக்காக செய்யாதிருங்கள்
- கடமைக்காக செய்யாதிருங்கள்
- பெருமைக்காக செய்யாதிருங்கள்
- ஆதாயத்துக்காக செய்யாதிருங்கள்
- அறைகுறையாக செய்யாதிருங்கள்

# ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகம்

Bro. **பென்னி மார்ட்டின்**

**தி**ருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரியமானவர்களே! நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை இரண்டிரண்டு பேராக ஊழியத்திற்கு அனுப்பும் போது **புறப்பட்டுப் போங்கள் ஆட்டுக் குட்டிகளை ஓநாய் களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ நான் உங்களை அனுப்புகிறேன் என்றார்** [லூக்கா 10:3]. சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், பிசாசுகளை துரத்தவும் சீஷர்களுக்கு இயேசு கிறிஸ்துவால் அதிகாரங் கொடுக்கப்பட்டது. ஊழியத்தை வெறுப்புடனே அல்ல, வெறித்தனமாக செய்ததன் விளைவாக வெற்றி மேல் வெற்றி அடைந்தனர். ஒரு கட்டத்தில் அவர்கள் நம் கர்த்தரிடத்தில் வந்து, ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்கு கீழ்ப்படிகிறது என்று சந்தோஷத்தோடே சொன்னார்கள். அதற்கு நம் ஆண்டவர் ஆவிகள் உங்களுக்கு கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல் உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்று சொன்னார்[லூக்கா 10:17,20].

இங்கே சீஷர்கள் கடின உழைப்பின் விளைவாக வெற்றி கனியைப் புசித்து களிப்பில் கர்த்தரிடம் தங்கள் சந்தோஷத்தை சம்ரிதியாக சமர்ப்பித்தில் சற்றும் தவறில்லை. ஆனால், அதைவிட அதிகமாக அவர்களுடைய நாமங்கள் பரலோகத்தில் எழுதப் பட்டதற்காக சந்தோஷப்பட்டிருக்க வேண்டும் என்று நம் ஆண்டவர் சொன்னார். இங்கே நம் இரட்சகர் பரலோகத்தில் எங்கே பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்லவில்லை. ஆனால், அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் பரலோகத்தில் ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் தான் அந்த நாமங்கள் எழுதப் படுகின்றன என்று வெளிப்படுத்துகிறார் [வெளிப்படுத்தின விசேஷம் 21:27]. பரலோகத்தில் அந்த ஜீவ புஸ்தகத்தில் நம் நாமங்கள் எழுதப்படுவது தேவன் நம்மை அவருடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார் என்பதற்கான உச்சித உத்திரவாதமாக உள்ளது. அதுமாத்திரமல்ல, நாம் பரலோகத்தின் பிரஜைகளாக மாறி வானுலகின் வாரிசுகள் என்னும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்வோம். இத்தனை ஆனந்தமும், ஆசீர்வாதமும் பரலோகத்தில் உள்ள ஜீவபுஸ்தகத்தில் நம் பெயர்கள் எழுதப்படுவதால் கிடைக்கிறபடியால் இதைக் குறித்து சற்று அழமாக ஆவியானவரால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிற வேத வாக்கியங்களில் காண்போம்.

I ***நம் நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பது தேவன் நம் ஒவ்வொருவரையும் நெருக்கமாக அறிந்திருக்கிறார் என்பதைச் சொல்கிறது.***

பரபரப்பும் அவசரமும் நிறைந்த இவ்வுலகை உண்டாக்கி, அதை இயக்கிக் கொண்டிருக்கிற தேவன் நம் ஒவ்வொருவரையும் பெயர் பெயராக அறிந்திருக்கிறார் என்னும் உண்மை உவகையின் உச்சிக்கே நம்மை கொண்டு செல்கிறது. தேவ தாசனாகிய மோசே யின் மீது தாம் கொண்டிருந்த அதீத அக்கறையை வலியுறுத்து வதற்காக கர்த்தர் மோசேயை நோக்கி **உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார்** (யாத்திராகமம் 33 :17). பரிசுத்த தேவனுடைய பாதுகாப்பும், பராமரிப்பும் பரி பூரணமாக நமக்கு உண்டு என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நம் ஆண்டவராகிய இயேச கிறிஸ்து யோவான் 10 ஆம் அதிகாரத்தில் தம்மை நல்ல மேய்ப்பராக அடையாளப்படுத்தி, ஆடுகளாகிய நம்மை பேர்சொல்லி அழைக்கும் போது அவருடனான நெருக்கமும் நெடுநாள் தொடருகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு பட்டணத்தியிருந்த தன் உடன் ஊழியர்களைப் பற்றி குறிப்பிடும் போது அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது என்று குறிப்பிடுகிறார். (பிலிப்பியர் 4:3) நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சர்தை சபைக்கு எழுதிய கடிதத்தில் ஜெயங் கொள்ளு கிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் என்று நிச்சயப்படுத்துகிறார் (வெளிபடுத்தின விசேஷம் 3:5).

II ***தேவன் நம்மைப் பேர்பேராக அறிந்திருக்கிறார் எனும் உண்மை இரட்சிப்பு என்பது கூட்டாக பெற்றுக் கொள்ளும் ஒன்றல்ல அது ஒருவர் தனிப்பட்ட ரீதியில் பெற்றுக் கொள்ளும் ஒன்று என்பதை நினைவுப்படுத்துகிறது.***

ஜீவ புத்தகம் உலகிலுள்ள நாடுகளின் பெயர்களை பரிசீலித்து பட்டியலிடவில்லை. மாறாக, தனிப்பட்ட நபர்களின் பெயர்களை தவிர்க்காமல் பட்டியலிடுகிறது. இரட்சிப்பு என்பது ஓர் இரவில் இரவலாக பெற்றுக் கொள்ளும் இயந்திரப் பொருளல்ல, ஒருவருடைய தனிப்பட்ட விசுவாசத்துடன் கீழ்ப்படிதலையும் இணைத்து பல சிரமங்களுடன் நாம் பெற்றுக் கொள்ளும் ஒன்றாகும். இரட்சிப்பு தேவன் நமக்கு இலவசமாகத் தரும் ஈவு என்றாலும் கூட தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய நாம் பிரயாசப்பட வேண்டியதாயிருக்கிறது. ஒருவர் தன் குடும்பப் பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறதினாலோ, சபையில் தான் அங்கம் வகிப்பதினாலோ, பரலோகம் போக முடியாது, தேவனோடு

தனிப்பட்ட முறையில் நெருக்கமான உறவு கொண்டு அந்த உறவில் விரிசல் ஏற்படாத படி முறை தவறாத வாழ்க்கை வாழ்வதன் மூலமாகத்தான் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஜீவ புஸ்தகத்தில் பெயர்கள் தோராயமாக எழுதப்படுவதில்லை, மிகத் துல்லியமாக எழுதப்படுகிறது. எந்தப் பெயர்களை எழுத வேண்டும் என்பதை தேவன் அறிவார் கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் [II தீமோத்தேயு 2:19] இப்புத்தகத்தில் பிழை ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை, தகுதியில்லாதவர்களுடைய பெயர்கள் ஒரு போதும் இடம்பெறுவதில்லை. அதே நேரத்தில் இடம் பெற வேண்டிய பேர்கள் ஒரு போதும் விடுபடுவதுமில்லை.

## III ***புதிய பிறப்பின் போது ஜீவ புஸ்தகத்தில் பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றன.***

பிரியமானவர்களே, இவ்வுலகில் ஏழை, பணக்காரர், படித்தவர்கள் படிக்காதவர்கள் என ஏராளமான ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. ஆனால் வேதாகமத்தின் அடிப்படையில் இவ்வுலகில் இரண்டு வகையான மக்கள் தான் இருக்கிறார்கள் மறுபடியும் பிறந்தவர்கள், மறுபடியும் பிறக்காதவர்கள். வேறுவிதமாகச் சொன்னால் பரலோகத்தில் ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப் பட்டவர்கள் பெயர் எழுதப்படாதவர்கள். இதில் நாம் எந்த வகை என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவருடைய வாழ்க்கையிலும் மறுபிறப்பு அல்லது புதிய பிறப்பு என்பது மிகவும் முக்கியமானது. மார்க்கப்பிரிவினை கூட்டத்தார். மத்தியில் மறு பிறப்பு என்னும் வார்த்தை மிகவும் பிரசித்தமாயிருக் கிறது. அவர்களுடைய பார்வையில் மறுபிறப்பு என்பது அந்நிய பாஷைகளில் பேசுவது, அற்புத அடையாளங்களைச் செய்வது போன்றவைகளைக் குறிக்கும் இதற்கும் வேதாகம ஆதாரம் ஒன்றுமில்லை. இருந்த போதிலும், அவர்கள் நம்மைப் பார்த்து மறுபடியும் பிறந்துவிட்டீர்களா என்று கேள்வி கேட்கும் போது நாம் இல்லை என்று பதிலளித்தால் அவர்கள் நம்மை வேற்றுக்கிரக வாசிகளைப் போல் வேடிக்கைப் பார்ப்பார்கள். மறுபிறப்பைப் பற்றி நிக்கொதேமுக்கு நம் ஆண்டவர் ஆழமாக விளக்கிவிட்டார். ஒருவன் ஜலத்தினாலும் ஆவியானாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் [ யோவான் 3:5]. அதாவது ஒருவர் தண்ணீர் ஞானஸ்நானத்தினாலும், ஆவியானவர் வெளிப் படுத்தியிருக்கிற ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலேயும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறார் [I பேதுரு 1:23].

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே, பரலோகத்தில் உள்ள ஜீவ புஸ்தகத்தில் நம் பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறதா இல்லையா

என்பது இப்பூமியில் தேவனால் நமக்காகத் தரப்பட்டிருக்கிற புஸ்தகமாகிய வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறவைகளை நாம் எப்படி விசுவாசிக்கிறோம், எப்படி கைகொள்கிறோம் என்பதைப் பொறுத்தே அமையும். நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு விசுவாசித்து, பழைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும் போது பரலோகத்திலுள்ள ஜீவ புத்தகத்தில் நம் பெயர் எழுதப்படும். ஒரு கிறிஸ்தவருடைய ஜீவியத்தில் ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்படுவது மிகவும் அவசியமானது, அதேநேரம் அந்தப் பெயரை தக்க வைத்துக் கொள்வது அதைவிட அவசியமானது.

ஏனென்றால், இப்பூமியில் நாம் வாழும் போது நம்முடைய கிரியைகளைக் குறித்து தேவனுக்கு கணக்கொப்புவிக்க வேண்டும். சில கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கை முறையைப் பார்த்தால் நியாயத்தீர்ப்பு என்று ஒன்று இல்லாதது போல நினைத்து வாழ்வது நிதர்சனமாகத் தெரிகிறது. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்பு விப்பான் (ரோமர் 14:12). நியாயத்தீர்ப்பின் நாள் இப்பூமியில் தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழ்ந்தவர்களுக்கு மகிழ்ச்சியான நாளாகவும், தேவனுக்கு பிரியமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தவர்களுக்கு திடுக்கிடும் நாளாகவும் இருக்கும். அந்த நாளில் ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டிருக்கிற நம் கிரியையின் படியே நியாயத்தீர்ப்பு செய்யப்படும். ஜீவபுஸ்தகத்தில் நம் பெயர்கள் எழுதப்பட்டிருப்பது ஒரு புறம் நமக்கு மகிழ்ச்சியைத்தந்தாலும் மறுபுறம் நம் பெயர்கள் நீக்கப்படுவதற்கும் வாய்ப்பு உண்டு என்பதை அறியும் போது அது நம்மை திகிலடையச் செய்கிறது. பாவத்தை ஜெயிக்கிற உண்மையுள்ள கிறிஸ்தர்களுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கிபோடப்படாது ( வெளி 3:5) யோவானின் எச்சரிப்பைக் கவனியுங்கள் **ஒருவன் இந்த தீர்க்கத்தரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால் ஜீவ புஸ்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார் (வெளி 22:19).**

# மாம்சசிந்தை மரணம்!

Bro. **பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக. வேதத்தில் பொதுவாக நாம் அறிந்தது பாவத்தின் சம்பளம் மரணம் என்பது! காரணம் பாவம் மனிதனை தேவனிடத்திலிருந்து பிரித்து ஆத்தும மரணத்தை உண்டாக்கவல்லது என்கிறது பைபிள். அது தான் ஏதேன் தோட்டத்தில், அதை புசிக்கிற நாளில் சாகவே சாவாய் என்பதின் அர்த்தமாக நாம் காண்கிறோம். அதே போல் மனுஷருக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரணம் (நீதி 14: 12) என்றும் நீதிமொழிகள் சொல்கிறது. ஆனால், நமது தலைப்பு ரோமர் 8:6 ல் மாம்ச சிந்தை மரணம் என்கிறார் பவுல். தொடர்ந்து மாம்சத்தின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டு எனவும் எச்சரிக்கின்றார்.

கிறிஸ்தவர்கள் வெறுமனே சபைகூடி வந்தால் பரலோகம் போய்விடலாம் என்று தப்பு கணக்கு போடக்கூடாது. காரணம் ஆவியின்படி நடக்கிறவர்களுக்குத்தான் ஆக்கினைத்தீர்ப்பில்லை என்று அப்போஸ்தல உபதேசம் தெளிவாக விளக்குகிறது. நமது நடக்கையைப்பற்றிக் குறிப்பிடும் போது பவுல் அது நமது சிந்தனை அடிப்படையில் தான் அமையும் என்கிறார் ( ரோமர் 8:5) கலாத்தியா சபையார் வழிவிலகி நடந்த போது, ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ நீங்கள் இத்தனை புத்தியீனரா? (கலா 3:3) என்று கண்டித்தார். அநேகர் இரட்சிக்கப்பட்ட ஆரம்பத்தில் ஆவியின் படி நடந்து பிற்பாடு மாம்சத்தின்படி நடக்கிற பெலவீனத்திற்குத் தள்ளப் படுகிறார்கள். ஆனால், நாம் தேவனுடைய ஆவியால் நடத்தப்படும் போதுதான் தேவனுடைய புத்திராய் இருக்க முடியும் என்று வேதம் தெளிவுபடுத்துகிறது (ரோம 8:14).

நாம் ஆவியின்படி நடக்கப் போராட வேண்டியுள்ளது. அப்படிப் போராடினால் தான் மாம்ச இச்சையை ஒழிக்கமுடியும். ஆண்டவர் சொன்ன இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யமுடியாது என்ற உதாரணம் இதற்கும் பொருந்துவதாய் தான் உள்ளது. இதைத்தான் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும், மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டும் என்று இருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது என்று ( கலா 5:17) ல் வாசிக்கின்றோம். இது ஒரு தொடர் போராட்டம் இதில் வெற்றி பெற நம் முயற்சிகளையும் நாம் தொடர வேண்டியுள்ளது. இதில் நமக்குள்ள பெரிய ஆறுதல்

என்னவென்றால் ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார் என்பதே (ரோமர் 8:26). இந்தப் போராட்டத்தைப் பற்றி பவுல் நிர்பந்தமான மனுஷன் நான் யார் என்னை விடுதலையாக்குவார் என்று கேட்டு அதற்குப் பதில் சொல்லும் வண்ணம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் என்கிறார்.

கிறிஸ்துவின் சபையில் இணைக்கப்பட்டபின் தொடர்ந்து பரிசுத்தமாக வாழவும், இரண்டாம் வருகையில் அவருக்கு முன் பிழையற்றவர்களாய் நிற்கவுமே ஆண்டவர் தம்மைத்தாமே சிலுவையில் ஒப்புகொடுத்தார். (எபேசியர் 5:26,27). மாம்சசிந்தை இதற்குத்தான் எதிராக இருக்கிறது. ஆகவே, கிறிஸ்தவனை ஆவிக்குரிய மரணத்திற்கு வழிநடத்துவது இந்த மாம்சசிந்தையே மாம்ச சிந்தை மரணம் என்பதில் பெருமை முதலிடத்தில் வகிக்கிறது. அதனால் தான் தேவன் அதற்கு எதிர்த்து நிற்கிறார் என்கிறார். யாக்கோபு பழைய ஏற்பாட்டில் உசியா, ஆமான், நேபுகாத்நேச்சார் போன்றவர்களும் புதிய ஏற்பாட்டில் தேவனுக்கு மகிமை செலுத்தாத ஏரோதுராஜா புழு புழுத்து இறந்து போனதையும் நாம் அறிந்திருக்கிறோம். ஜீவனத்தின் பெருமை தேவனால் அல்ல இந்த உலகத்தால் உண்டானது. பெரும்பாலான விசுவாசிகளின் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பது இந்தப் பெருமையே. மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை என்றும், அது தேவனுக்குக் கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது (ரோமர் 8:7). இந்த பகையில் விபச்சாரம் முக்கிய பங்கு வகிக்கிறது (யாக் 4:4) என்பதை நாம் அறிந்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

கிறிஸ்து தம் பாடுகளைப் பற்றி முன் கூட்டி பேதுருவிடம் தெரிவித்த போது அது நேரிடக்கூடாது என்று பேதுரு சொன்னார். அதற்கு ஆண்டவர் நீ தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திப்பதால் எனக்கு இடறலாய் இருக்கிறாய் என்றார் (மாற்கு 8:33) ஆகவே நம் வாழ்வில் பாடுகளைச் சந்திப்பதில் சோர்ந்து போகக் கூடாது. மற்றவர்களுக்கும் இடறலாய் இருக்கக் கூடாது. பூமியிலுள்ளவைகளை அல்ல மேலானவைகளை தேட வேண்டும் என்பது நமக்கு இடப்பட்ட கட்டளை. பொருளாசையைத் தவிர்த்து முதலாவது நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடும் போது அவர் நம்மை போஷிப்பார் என்பது நிச்சயம்.

இயேசுவை ஏற்றுக் கொண்ட நாம் நம்முடைய சிந்தனைகளை சீர்படுத்த வேண்டும். வேறு விதமாய் நடக்கிறவர்களை, அவர்கள் தேவன் வயிறு என்றும் அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச்

சிந்திக்கிறார்கள் என்றும் பவுல் சாடுகிறார் [ பிலிப் : 3:17,19] எப்படி விசுவாசம் ஆவிக்குரியதாய் உள்ளதோ அப்படிப் போல **அவிசுவாசம்** மாம்ச சிந்தைக்குரியதாய் இருக்கிறது. தேவனுடைய வாக்கு தத்தத்தை விசுவாசியாமல் வேவு பார்த்தவர்கள் சொன்னதை நம்பி இஸ்ரவேலர் கானானில் பிவேசிக்கக் கூடாமற்போயிற்று [எபி 3:19].

அதேபோல் தான் கடலின் மீது நடந்து பேதுரு மூழ்கியபோது, அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய்? என்று கடிந்து கொள்ளப்பட்டான் [மத் 14:31] நம் வாழ்விலும் கவலையில் முழ்கும் போது அற்ப விசுவாசியே என்றழைக்கும் ஆண்டவரின் சத்தத்தை கேட்போம்.

மாம்சத்திற்கென்று விதைக்கின்றவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான். ஆவிக்குரிய விசுவாசிகளாகிய நாம் வாழ்வில் திருப்தி கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால், போதுமென்கிற மனதுடனேக் கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயமாகும். ஆகவே, பொருளாதாரக் கஷ்டங்களின் போது நம்பிக்கையோடே ஜெபித்து தேவனுக்குக் காத்திருப்போம். அவர் நம் உபத்திரவங்களை பார்க்கிற தேவன். தன் பிழையை உணராமல் மற்றவர்களைக் குற்றப்படுத்தி பேசுவதும் மாம்சசிந்தைக்கு அடையாளமாக இருக்கிறது. **ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள். அவன வன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.** கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது [பிலி 2:3-5].

எனவே, தேவனுடைய பிள்ளைகளே! நம் சிந்தனைகளைக் கெடுக்கும் காரியங்களிலிருந்து விலகியிருப்போம். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். தேவனோ, நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறவர். இருதயத்தில் சுத்தமுள்வர்கள் பாக்கியவான்கள் என்பதை நினைவு கூருவோம். தாவீதைப் போல தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் [சங் 51:10] என்று ஜெபிப்போம். தேவக்கிருபை நம்மனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ✝

## விலகியிரு

- மனுஷனை நம்புவதற்கு விலகியிரு – சங்.118:8
- பண ஆசைக்கு விலகியிரு – 1தீமோ.6:10
- உலக சிநேகத்திற்கு விலகியிரு – யாக்.4:4,1யோ2:15

# நம் தேவன்

விஞ்ஞானிகள் நம்மிடமிருந்து கோடிக்கணக்கான ஒளி ஆண்டுகள் துரத்திலுள்ள நட்சத்திரங்கள்,பால்வழிப்பாதை மற்றும், சூரியன்பற்றி பேசுகிறார்கள். உண்மையாகவே, ஆயிரம் கோடி ஒளி ஆண்டுகள் பயணித்த பிறகு இப்பிரபஞ்சத்தின் உருவம் நம் கண்களுக்கு முன்பாக விவரிக்கப்பட்ட திரைச்சீலைப்போல்தான் காட்சியளிக்கும். கோடிக்கணக்கான பால்வழிப்பாதைகள் பிராமண்டமாக காட்சியளித்து நம்மை பிரமிக்கசெய்கின்றன. இப்பிரபஞ்சத்தின் எல்லையில்லா உருவமும் அதன் சிக்கலானதன்மைகளும், அதன் இரகசியங்களுங்கூட மனிதமனதால் புரிந்துகொள்ள முடியாதவைகளாகவே இருக்கின்றன.

இருந்தபோதிலும், சிருஷ்டிகரும், நித்தியமானவரும்,பரிசுத்தரும், உன்னதமானவருமான தேவன் தம்முடைய வார்த்தையின் வல்லமையால் இவையெல்லாவற்றையும் உண்டாக்கிவிட்டு தம்மைப்பற்றியும், தம்முடைய பண்புகளைப் பற்றியும், இப்பிரபஞ்சத்தைப்பற்றியும் வேதப்புத்தகத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய மகத்துவத்தையும், எல்லையில்லா ஞானத்தையும் நாம் எவ்வளவு அதிகமாக அவருடைய சமுகத்தில் கண்டு உண்மையாகவே பயம் கலந்த ஆச்சரியத்தில் மௌனமாகிறோம்.

இப்படி, தேவனுடைய மகத்துவத்தை எண்ணி நாம் மலைத்துப்போய் நிற்க சிலர் வானத்தில் பழைய மனிதன் என்று கேலி செய்கிறார்கள். வேலுசிலர், இயேசுவே, சுகமாக்கும் என்று நிற்பந்திக்கிறார்கள். இன்னும் சிலர், தேவனைப்பற்றி பலவிதமான பரிகாசங்களை தயார்செய்து எல்லையில்லா வல்லமையைக் கொண்டிருக்கும் பரிசுத்தாரைப் பார்த்து நகைக்கிறார்கள். நான் ஒரு புத்தகத்தைப் பார்த்தேன், அதன் தலைப்பு என் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. அப்புத்தகத்தின் தலைப்பு **உட்காரும் தேவனே** என்பதாயிந்தது. எனக்கு கடுங்கோபம் வந்தது மனிதர்களாகிய நாம் நம்மை யார் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம்!

# பிலதெல்பியா சபை

Bro. K.M. பிலிப் பவானி

**அ**ன்பான வாசகர்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். எதையும் ஒப்பிட்டுப் பார்த்து சரியானதை தேர்ந்தெடுப்பதில் மனிதன் தனித்தன்மை வாய்ந்தவன். படிப்பு, வேலைவாய்ப்பு, கணவன், மனைவி, வீடு, பொருட்கள், வாகனங்கள் இப்படி தனக்குத் தேவையானதை தேர்ந்தெடுக்கும்பொழுது, சம்மந்தப்பட்ட ஒன்றோடொன்று ஒப்பிட்டு பார்ப்பது நல்லதுதான். சில சமயங்களில் மனிதன் தன்னைப்போன்ற மனிதர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதையும் அறிவோம். இதன் மூலம் நல்லவைகளை, நன்மை தரக் கூயவைகளை பிடித்துக் கொள்ளவும் தீயதைத் தவிர்க்கவும் முடியும். மேலும், ஒப்பிடுதல் தன் நிலையை உணரச் செய்யும். ஒரு சபையைச் சார்ந்தவர்கள் மற்றொரு சபையோடு ஒப்பிடுதல் ஒரு சிறந்த அறிவுப்பூர்வமான செயலாகும். இந்த ஒப்பீடு தேவன் நம்முன் நிறுத்தும் சபையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதே சாலச் சிறந்தது. ஆகவே, இக்கட்டுரையில் வேதத்தில் பரிசுத்த ஆவியானவர் ஊழியக் காரனாகிய யோவான் மூலம் வெளிப்படுத்தின விசேசம் 2,3, அதிகாரங்களில் சுட்டிக் காட்டும் 7 சபைகளில் பிலதெல்பியா சபை யை நமக்கு முன் நிறுத்தி நம் சபையோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். குறைகளை தவிர்ப்போம்; நிறைகளை சபைகளில் நிறை வேற்றுவோம்.

பிலதெல்பியா என்பதின் பொருள் **சகோதர சிநேகம்** என்பதாகும். அதாஸ் என்ற ரோமப் பேரரசன் தன் சகோதரனுக்காகவே நல்ல சமவெளியில் செழிப்பான பசுமையான இடத்தில் புதிதாய் உருவாக்கின ஒரு நகரம். இங்குதான் சபை தேவநாமம் மகிமைக்கென்று பிரகாசித்தது. இது பூகம்பம், நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட நகரம். இங்கு சபையாகக் கூடி ஆராதித்தனர். சுவிசேச ஊழியமும் நடைபெற்றன. பிற்காலத்தில் ரோமரும், துருக்கியரும் முகமதியரும் படையெடுத்ததால் சபைக்கு உபத்திரவம் ஏற்பட்டது. ஆனாலும் தேவ தயவாலும், விசுவாசிகளின் உறுதியாலும் சபை நிலைத்து நின்றது. இப்படிப்பட்ட பிலதெல்பியா சபை குறித்து தேவன் வெளிப்படுத்திய செய்திகளை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

முதலாவது தேவன் சபைக்கு தன் மூன்று தன்மைகளை வெளிப் படுத்துகிறார். 1. பரிசுத்தமுள்ளவர் 2. சத்தியமுள்ளவர் 3. தாவீதின் திறவுகோலை உடையவர் (வெ 3:7). என்று அறிமுகப்படுத்துகிறார்.

I. **பரிசுத்தர் :** நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்: நான் பரிசுத்தர் என்றும் [லேவி 11:44] நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தர் என்றும் [ஏசா 43:15] தேவன் தன் பரிசுத்தமான தன்மையை தெளிவுபடுத்தி யிருக்கிறார். குமாரனாகிய இயேசுவும், பரிசுத்த பிதாவே என்று [யோ 17:11] ஜெபிப்பதன் மூலம், உங்களை அழைத்தவர் பரிசுத்தர் என்று பரிசுத்த ஆவியானவரும் [1பேதுரு.1:5] உறுதிப்படுத்துவதைப் பார்க்கிறோம். நாம் ஆராதிக்கிற தேவன் பரிசுத்தமுள்ளவர் என்பதில்தான் கிறிஸ்தவமே அடங்கியிருக்கிறது. நாம் பரிசுத்தவான்களாயிருக்க வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம் [1பேதுரு.1:16]. இதற்காகவே தன் ஒரே பேரான குமாரனை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தார் [கொலோ 1:21]. சமுதாயத்திற்கு முன் நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் [1பேதுரு. 1:15] என்பதே தேவ ஆலோசனையாகும். பரிசுத்தவான்களின் சபையிலே உம்முடைய உண்மை விளங்கும்; தேவன் பரிசுத்தவான் களுடைய ஆலோசனை சபையில் மிகவும் பயப்படத்தக்கவர் [சங் 89:5,7] என்று சபை குறித்து வேதம் பெருமைப்படுகிறது. கிறிஸ்துவின் வருகையில் சபையார், கறையற்றவர்களும், பிழை யில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே ஜாக்கிரதையாயிருப்போம் [II பே 3:14].

II **சத்தியமுள்ளவர் :** பிதாவாகிய தேவன் சத்தியமுள்ளவர் என்று இயேசு சாட்சி கூறுகிறார். [யோவான் 7:28:8:26]. அவருடைய சத்தியம்தான் வேதமாக நம் கைகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது உம்முடைய வேதமே சத்தியம்; உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம் என்பதை நாம் சரியாகப் புரிந்து கொண்டு [119 : 142, 160] சத்தியத்திற்குக் கீழ்ப்படியும்பொழுது தேவனுக்கு கீழ்ப்படிகிறோம். நம்மிடம் அசத்தியத்திற்கு இடமில்லை. அவரை அறிந்திருக்கிறே னென்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான் அவனுக்குள் சத்திய மில்லை [1 யோ 2:4]. ஆகவே, சத்தியமுள்ளவரும் நமக்குள் வாசம் செய்யார். நாம் சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள சாதியாயிருப்போம் [ஏசா. 26:2].

III **தாவீதின் திறவுகோலை உடையவர்** இது மனிதன்மேல் தேவனுடைய ஆளுமையை குறிக்கிறது. திறக்கவும், பூட்டவும் வல்லமை உடையவர். அவருடைய ராச்சியம் [எபி. 2:28]. அவருடைய ராச்சியத்திற்கு முடிவிராது [லூ. 1:33]. இப்படிப்பட்ட ராச்சியத்தின் திறவுகோலைத்தான் பிதா குமாரனிடம் கொடுத்தார். குமாரன் அதை பேதுருவிடம் கொடுத்தார். பேதுரு கிறிஸ்து

உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு ஏறினபின், அப்.2–ல் காணப்படுவதுபோல் முதல் பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் சுமார் 3000 பேர் கொண்ட சபையாகிய ராச்சியத்தை திறந்து வைத்தார். இதை அன்று முதல் இன்று வரை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ள முடியவில்லை. உலகமெங்கும் ராச்சியமாகிய சபை வியாபித்திருக்கிறது. கிறிஸ்துவின் வருகையில் ..... தேவனும் பிதாவுமாயிருக்கிறருக்கு ராச்சியத்தை ஒப்புக் கொடுப்பார் (1கொ 15:24). அப்பொழுது ராச்சியத்தின் (சபையின்) மக்களாகிய நாமும் பிதாவோடு பரலோகில் வாழும் பாக்கியத்தைப் பெறுவோம். இச்சந்தர்ப்பத்தை பிலதெல்பியா சபையார் பயன்படுத்தி அநேகரை திறக்கப்பட்ட வாசல் வழியாய் சபைக்குள் சேர்த்தனர். சபை வளர்ந்தது. இதே வாய்ப்பு நமக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அநேகரை ராச்சியத்திற்குள் அழைத்து வருவோம். தேவனை மகிமைப்படுத்துவோம்.

தன்னைக் குறித்து 3 பண்புகளை வெளிப்படுத்திய தேவன் பிலதெல்பியா சபையின் 4. பண்புகளை எடுத்துரைப்பதை கவனிப்போம்.

I உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் என்கிறார் (3:8)

மற்றவர்கள் சபையின் வெளித்தோற்றைத்தான் பார்க்க முடியும்.

ஆனால், இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிற தேவன் (சங்கீதம் 7:9) மட்டுமே சரியானதை வெளிப்படுத்த முடியும். தேவன் தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். அவருக்குள் நிலைத் திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும் (1யோவான் 2:6) என்ற எச்சரிக்கை உணர்வு வேண்டும். சபை வாழ்க்கையில் மாய்மாலம் கூடாது. கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர், வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும் என்று (சங் 139:1,23,24) ஒப்புக் கொடுத்தலின் வாழ்க்கை வாழ வேண்டும். நம் கிரியை தேவ பார்வையில் சரியாய் இருந்தால் நம் ஜெபம் கேட்கப்படும். அவருக்கு முன்பாக பிரியமானவைகளை செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்வது எதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம் (1 யோவான் 3:22) என்பது நம்மை தைரியப்படுத்துகிறதல்லவா? இதுவும் பிலதெல்பியா சபையாரிடம் நாம் கற்கும் பாடமாகும்.

II உனக்கு கொஞ்சம் பெலன் இருந்தும் என்று சொல்வதன் மூலம் தேவன் தன் அன்பை, அக்கறையை

வெளிப்படுத்துகிறார். அதாவது கொஞ்சம் பெலன்தான் இருக்கிறது என்று நினைத்து சோர்ந்து போகவோ, பயப்படவோ வேண்டாம். கொஞ்சத்தில் உண்மையாயிருந்தால் அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பேன் (மத் 25:21) என்று அவர்களது விசுவாச பக்தி வாழ்க்கையை பாராட்டுகிறார். நம் பெலவீனத்தைக் குறித்து தேவன் அற்பமாய் எண்ணுவதில்லை. உன் பெலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும் என்று வாக்கு கொடுத்திருக்கிறார் (IIகொ 12:9). கிதியோனிடம் உனக்கிருக்கிற இந்த பெலத்தோடே போ ..... நீ இஸ்ரவேலை இரட்சிப்பாய் என்று அனுப்பினார். மிகப்பெரிய வெற்றி கிடைத்தது. கொஞ்சம் மாவு, கொஞ்சம் எண்ணெய்தான், ஆனால் தேவ வார்த்தைக்கு முதலிடம் கொடுத்த சாரிபாத் விதவையின் விசுவாசத்தால் அந்த கொஞ்சம் மாவும், கொஞ்சம் எண்ணெயும் பஞ்சம் தீருமட்டும் அக்குடும்பத்தை திருப்தியாய் போஷித்தது (1இ 17:8-16). தாவீதின் கொஞ்சம் பெலன் தான் (கூழாங்கல்) விசுவாச அறிக்கையுடன் சேர்ந்து இராட்சதனும் இராணுவ வீரனுமான கோலியாத்தை வீழ்த்தியது. விதவை போட்ட கொஞ்சம் 2 காசுதான் இன்று வரை பேசப்படுகிறது (லூக்கா 21). ஆம் கொஞ்சம் என்று பயப்படாதே, அதை முழுமனதுடன் செயல்படுத்து. ஜெயங்கிடைக்கும் வரை மங்கி எரியும் தீயை அணைக்கமாட்டார். எவ்வளவோ எதிர்ப்புகள், போராட்டாங்கள் மத்தியிலும் கொஞ்சம் பெலன் இருந்தும் என் வசனத்தைக் கைக்கொண்டாய் என்றும் பாராட்டுகிறார். பிலதெல்பியா சபையார் உறுதியாய் நின்றார்கள். தேவ ஒத்தாசையைப் பெற்றார்கள். நாமும் நமக்கிருக்கும் கொஞ்சம் விசுவாசத்திலும் பக்தி வாழ்க்கையிலும் உறுதியாய் நிற்போம். வெற்றியின் வாழ்க்கை வாழ்வோம்.

இங்கு கொஞ்சம் பெலன் இருந்தும் அவர்களது கிரியைகளை தேவன் பாராட்டுகிறார். நீ என் நாமத்தை மறுதலியாமல் இருந்தாய் என்று அவர்களது விசுவாச தைரியத்தை பாராட்டுகிறார். சபைக்கு எவ்வளவு துன்பம் வந்த போதும், மறுதலித்து பின்வாங்கிப் போகாமல் தேவ நாமத்தை தூக்கிப் பிடித்தார்கள். தேவன் கைவிடவில்லை. வரப்போகிற சோதனை காலத்திற்கு தப்பும்படி நானும் காப்பேன் என்று (10) சபையாரை தேவன் காத்துக் கொண்டார். இது மட்டுமல்ல கொஞ்சம் பெலன் இருந்தும் என் வசனத்தைக் கைக் கொண்டாய் என்றும் பாராட்டுகிறார். பிலதெல்பியா சபையார் தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவி கொடுக்கிறான் (யோவான் 8:47) என்பதையும், தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் (I யோவான் 2:5) என்பதையும் தெளிவாய் புரிந்து கொண்டார்கள். மேலும், ஒருவன்

என்னில் அன்பாயிருந்தால் என் வசனத்தைக் கைக்கொள்வான். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம் (யோவான் 14:23). இந்த வாக்கு நமக்கு மிகுந்த தைரியத்தைக் கொடுக்கிறதல்லவா? ஆம் பிலதெய்பியா சபையார் ஆவியின் பட்டமாகிய வேத வசனத்தை பிடித்துக் கொள்ள தங்களை ஒப்புக்கொடுத்ததால்தான் உபத்திரவம் என்ற சாத்தானை ஜெயித்து ஜெய வீரர்களாய்த் திகழ்ந்தார்கள். ஜீவவிருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் ( வெளி 22:14). இப்படி வசனத்தைக் கைக்கொள்கிற நம்மை சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் என்று பிலதெல்பியா சபையைக் காத்த தேவன் நம்மையும் காப்பாராக. ஆமென்!!

## நாளும் நடப்பும்

* தமிழகம் முழுவதும் கனமழை காரணமாக இலட்சக்கணக்கானோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர், கோடிக் கணக்கான மதிப்பில் உயிர்சேதம்.
* அரிசி அட்டைதாரர்களுக்கு இருபது பொருள்களை உள்ளடக்கிய பொங்கல் பரிசு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.
* இந்தியாவின் பல நகரங்களில் காற்று மாசுபடுவது ஆபத்தான நிலையில் உள்ளது.
* தமிழக அரசால் குறைந்த விலையில் வலிமை சிமெண்ட் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
* உலகக்கோப்பை T 20 கிரிக்கெட் கோப்பையை ஆஸ்திரேலியா கைப்பற்றியது.

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month


# எங்களது இதர வெளியீடுகள்





















சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.

Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 34 இதழ் - 11 நவம்பர் - 2021

தனிப்பிரதி ரூ.10/-

**நவம்பர் 1-4, 2021 ஆகிய நான்கு நாட்கள்**
**ஏற்காட்டில் நடந்த ஊழியர் கருத்தரங்கின் போது...**






## ஆசானின் அறிவுரையிலே ...



| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| புதிய ஏற்பாட்டு ஒற்றுமை | 11 |
| பெண்கள் பகுதி | 13 |
| வாலிபர் பகுதி | 17 |
| சிறுவர் பகுதி | 20 |
| ஆட்டுக்குட்டியானவரின் ... | 22 |
| மாம்சசிந்தை மரணம் | 26 |
| நம் தேவன் | 29 |
| பிலதெல்பியா சபை | 30 |



- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.


– ஆசிரியர்.


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.













# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026

